# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. செ. தேவராஜன்,** மின்குறைத் தீர்ப்பாளர்
**மேல்முறையீட்டு மனு எண். 30 / 2018**

திரு. M. மாணிக்கம்,
எண்.49, J– பிளாக்,
M.M.D.A. காலனி,
அரும்பாக்கம், சென்னை– 600 106 . . . . மனுதாரர்
(திரு. M. மாணிக்கம்)

எதிர்

1) செயற்பொறியாளர்/O&M/அண்ணா நகர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
1100 AH பிளாக், 5வது தெரு, ரஙகநாதன் கார்டன்,
அண்ணா நகர், சென்னை–40

2) உதவி செயற்பொறியாளர்/O&M/அரும்பாக்கம்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
P பிளாக், 253, MMDA காலனி,
அரும்பாக்கம், சென்னை–106

3) உதவி பொறியாளர்/O&M/M.M.D.A காலனி
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
P–பிளாக், 253, M.M.D.A காலனி,
அரும்பாக்கம், சென்னை–106 . . . எதிர்மனுதாரர்கள்
(திரு.S. நெடுமாறன், உதவி செயற்பொறியாளர்/அரும்பாக்கம்
திருமதி. C. கல்யாணி, உதவி பொறியாளர்/MMDA காலனி)

**கேட்புரை நாள் : 06–09–2018**

**ஆணை நாள் : 11–12–2018**

திரு. M. மாணிக்கம், எண்.49, J– பிளாக், M.M.D.A. காலனி, அரும்பாக்கம், சென்னை– 600 106 அவர்களின் நாளிடப்படாத இவ்வலுவலகத்தில் 22.06.2018 அன்று பெறப்பட்ட மனு மேல் முறையீட்டு மனு எண்.30/2018 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட

மேல்முறையீட்டு மனு எண். 30/2018 மனுவின் மீது மின்குறைத்தீர்ப்பாளரின் கேட்புரை 06–09–2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதஙகள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதஙகள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதஙகளையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழஙகப்படுகிறது.

## 1. <u>மேல்முறையீட்டாளரின் வேண்டுகோள்</u> :

மேல்முறையீட்டாளரின் வீட்டின் சுவரை ஒட்டி மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளது என்றும் இதுகுறித்து பலமுறை புகார் தெரிவித்தும் இதுநாள் வரை சரியான நடவடிக்கையில்லை என்றும், ஆகவே மின்மாற்றியை வேறு இடத்தில மாற்றியமைக்குமாறு கோரி தனது மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

## 2. <u>வழக்கின் சுருக்கம்</u> :

2.1 மேல்முறையீட்டாளர் திரு. M. மாணிக்கம் அவர்கள், அரும்பாக்கம் M.M.D.A. காலனியில் வசித்து வருவதாகவும், அவரது வீட்டின் சுவரை ஒட்டி மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேற்கண்ட மின்மாற்றி பாதுகாப்பாக வேறு இடத்தில் மாற்றியமைக்க கோரி உதவி பொறியாளரை அணுகி பலமுறை புகார் செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அதற்கு மாறாக மின்மாற்றி மாற்றியமைக்க தம்மிடமே பணம் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதால் மின்குறைதீர் மன்றத்திடம் புகார் தெரிவித்துள்ளார்.

2.2 சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்குவின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தனது 27.4.2018 நாளிட்ட ஆணையை அளித்துள்ளது. மன்றத்தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

## 3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்குவின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 27.4.2018 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“<u>நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வு</u>*

*மனுதாரர் திரு. M. மாணிக்கம் அவர்கள் கேட்புரையின் போது எடுத்துரைத்த வாதத்தில் தனது வீட்டின் சுவரை ஒட்டி மின்மாற்றியை அமைத்திருப்பது மிகவும் இடையூறாக இருப்பதால் அதை வேறிடத்தில் மாற்றியமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.*

*இதற்கு பதிலுரைத்த எதிர் மனுதாரர்கள் மின்மாற்றி RAPDRPதிட்டத்தின்படி J-பிளாக்கில் சாலையின் ஓரத்தில் அமைக்கப்பட்டு அதிலிருந்து J-பிளாக் குடியிருப்பு மக்களுக்கு சீரான மின் விநியோகம் வழஙகப்பட்டு வருகிறது என்றும் மின்மாற்றியை வேறிடத்தில் மாற்றி அமைக்க வேண்டுமானால் அதற்கான உரிய இடத்தை தேர்வு செய்த பின்னர் மின்மாற்றியை மாற்றி நிறுவும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையினை மனுதாரர் செலுத்தும் பட்சத்தில் தான் நடவடிக்கை எடுக்க இயலும் என்று எதிர் மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் மின்மாற்றி போதிய இடைவெளியில்தான் அமைக்கப்பட்டுள்ளது என்று எதிர் மனுதார்கள் தெரிவித்துள்ளனர்.*

*ஏற்கனவே மின்மாற்றி நிறுவப்பட்டு அதிலிருந்து கடந்த ஒன்றரை வருடமாக மின் விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில் அதை வேறிடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டுமானால் அதை மாற்றுவதற்கான கட்டணத்தை மனுதாரர் செலுத்தும் பட்சத்தில் தான் மின்மாற்றியை மாற்றி அமைக்க இயலும். எனவே மின்மாற்றியை வேறிடத்தில் மாற்றியமைக்க மனுதாரர் அதற்குண்டான கட்டணத்தை செலுத்த சம்மதித்தால் எதிர் மனுதாரர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தீர்வு செய்கிறது.*

*மேற்கண்ட தீர்வுரையின்படி மனுதாரரின் மனு முடித்துக் கொள்ளப்படுகிறது..”*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதஙகள்</u> :**

4.1 எனக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வழஙகப்பட்ட இடத்தில் வீடுகட்டி உள்ளேன். எனது வீட்டின் சுவர் அருகில் என்னிடம் அனுமதி பெறாமல் 100 kVA மின் மாற்றி, அருகம்பாக்கம் MMDA பிரிவு உதவி மின் பொறியாளர், AE மற்றும் உதவி செயற்பொறியாளர், AEE மின் மாற்றி அமைத்து விட்டார்கள். நான் திருமஙகலம் மேற்பார்வை பொறியாளர் அவர்களிடம் புகார் கொடுத்தேன். அப்பொழுது மின் இணைப்பு கொடுக்கவில்லை. மேலும் விசாரனை நடைபெறும்போது அவசரமாக மின் இணைப்பு கொடுத்துவிட்டார்கள்.

4.2 நானும் (கடந்த ஒன்றரை வருடமாக) அதாவது கடந்த ஜனவரி 2017ல் இருந்து தஙகளுக்கு மனு அளித்த வண்ணம் உள்ளேன். ஆனால் நீஙகள் குறைதீர்க்கும் கேட்புரையின் போது மின்மாற்றியை மாற்றியமைக்க இடம் தருமாறு என்னிடம் கோரினால் நான் எஙகு காண்பிப்பது.

4.3 மேலும் அதற்கான செலவு தொகையும் நானே செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளீர்கள். ஆனால் மின்மாற்றி அமைந்துள்ளது எனது சொந்த இடத்தில். அதற்கான ஆவணமும் தஙகளிடம் உள்ளது. நானோ கூலித்தொழிலாளி. என்னை இடம் காட்டு அதற்கான செலவை ஏற்றுக் கொள் என்றால் நான் எஙகு செல்வது. இந்த மின் மாற்றியினால் எனது வீட்டை இடித்துக் கட்டவும் முடியாமல் நான் தவித்துக் கொண்டு இருக்கிறேன். நீஙகள் கூறும் தொகை ரூ.2,50,000/– செலுத்த முடியுமானால் நான் கடந்த ஒன்றரை வருடமாக உஙகளுக்கு மனு அளித்துக் கொண்டு இருக்க மாட்டேன். எனவே தயவு கூர்ந்து அரசாஙக செலவில் அந்த மின் மாற்றியை மாற்றித் தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

4.4 மேலும் மின் மாற்றியானது எனது வீட்டிற்கு போதிய இடைவெளிவிட்டு அமைந்துள்ளது என கூறியுள்ளீர்கள். உஙகளது அலுவலரை அனுப்பி பாருஙகள் ஒரு சின்னக் குழந்தை செல்வதற்கான இடம் கூட இல்லை. மேலும் எனது வீட்டின் சுவற்றிலிருந்து ஒரு அடி கூட இல்லை.

4.5 மேலும் இரண்டு பக்கம் தெரு உள்ள சந்திப்பு உள்ளது மேற்கில் 30 அடி தூரத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் உள்ளது. அந்த இடத்தில் வைத்திருக்கலாம். எனது வசதிக்காக சுவரில் சுண்ணாம்பு வர்ணம் பூச முடியவில்லை. சாரம் போட்டு சுவர் பழுது பார்க்க முடியவில்லை. ஆகையால் தயவு செய்து தஙகள் மூலம் ஆய்வு செய்து ஒரு மீட்டர் இடைவெளி உள்ளதா என பார்த்து மின்மாற்றி இடம் மாற்றி வைக்க ஆவண செய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகிறனே்.

## 5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதஙகள்</u> :

5.1 J-பிளாக் எம்.எம்.டி.ஏ காலனியில் நிலவிய குறைந்த மின்னழுத்தத்தை நிவர்த்தி செய்து சீரான மின்விநியோகம் வழஙகுவதற்காக J-பிளாக் சாலையின் ஓரத்தில் 100 கே.வி.ஏ மின்மாற்றி RAPDRP திட்டத்தில் கடந்த 2016ம் வருடம் அமைக்கப்பட்டது. எண்.49, J-பிளாக் எம்.எம்.டி.ஏ காலனி, அரும்பாக்கம், சென்னை–106 என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு.எம். மாணிக்கம் அவர்கள் அவருடைய வீட்டின் சுவரருகில்

மின்மாற்றி அமைத்துள்ளதாக புகார் அளித்து அதனை வேறிடத்தில் மாற்றியமைக்க வேண்டி கோரிக்கை விடுத்திருந்தார்.

5.2 மேற்கண்ட மின்மாற்றி சாலையின் ஓரத்தில் போதிய இடைவெளியுடன் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து J-பிளாக் பொது மக்களுக்கு சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில் அதனை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டுமானால் அதற்கான உரிய இடத்தை தேர்வு செய்து பின்னர் மின்மாற்றியை மாற்றி நிறுவும் பணிக்கான மதிப்பீட்டு தொகையினை மனுதாரர் செலுத்தும் பட்சத்தில் தான் நடவடிக்கை எடுக்க இயலும் இந்த விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவிற்கான பதிலுரை

(i) மனுதாரர் மின்மாற்றி தனது சொந்த இடத்தில் நிறுவியிருப்பதாக கூறியுள்ளது உண்மைக்கு புறம்பாகும்.

மின்மாற்றி J-பிளாக் சாலையின் ஓரத்தில் பாதுகாப்புடன் நிறுவப்பட்டுள்ளது. மனுதாரர் தன்னுடைய இடம் முழுவதும் சிறிய இடைவெளி எதுவுமின்றி வீடு கட்டியுள்ளார். அவர் வீடு கட்டியுள்ள இடத்தை அவருடைய சொத்து பத்திரத்துடன் ஒப்பிட்டு அளந்து பார்த்த போது அவர் மேற்கு மற்றும் வடக்கு பக்கம் கூடுதலாக 1/2 அடியும் தனக்கு சொந்தமில்லாத இடத்தில் கட்டியுள்ளார். மின்மாற்றி கட்டமைப்பு சாலையின் ஓரத்தில் தான் அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் இல்லை என்று சமர்ப்பிக்கின்றேன்.

(ii) மனுதாரர் அவர்கள் மின்மாற்றியை அரசாஙக செலவில் மாற்றி தரும்படி கோரியிருப்பது விதிமுறைகளின்படி செய்ய இயலாது.

தமிழ்நாடு மின் வழஙகல் விதி எண்.5(6)ன் படி மின் உபகரணஙகளை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமானால் அதற்கான முழுச்செலவினையும் மின் நுகர்வோரே ஏற்க வேண்டும். எனவே மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க அதற்கான முழுச்செலவினையும் மனுதாரர் ஏற்கும் சமயத்தில் தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சமர்ப்பிக்கின்றேன்.

(iii) மனுதாரரின் வீட்டிற்கும் மின்மாற்றிக்கும் ஒரு அடி கூட இடைவெளியில்லை என்று மனுதாரர் கூறியிருப்பது ஏற்புடையது அல்ல ஏனெனில் மின் மாற்றி கட்டமைப்பு J-பிளாக் சாலையின் ஓரத்தில் பாதுகாப்புடன் போதிய இடைவெளியில் உள்ளது மனுதாரர்தான்

அவருடைய இடத்தில் நான்கு பக்கமும் சிறிது இடைவெளியின்றி வீடு கட்டியுள்ளார் மின்மாற்றி பாதுகாப்புடன் சாலையின் ஓரத்தில் அமைந்துள்ளது இதனால் மனுதாரரின் வீட்டிற்கு எவ்வித இடையூறும் இல்லை என்று சமர்ப்பிக்கின்றேன்.

(iv) எம்.எம்.டி.ஏ காலனி, அரும்பாக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் வீடுகள் மிகவும் நெருக்கமாகவும் சாலை மிகக் குறுகலாக உள்ள பகுதிகள் ஆகும். மின் நுகர்வோர்கள் குறைந்த மின்னழுத்தம் உள்ளது, சீரான மின் விநியோகம் வழங்க வேண்டும் என்று புகார் அளிக்கிறார்கள். ஆனால் மின் தேவையை பூர்த்தி செய்ய மின்மாற்றி மின் இணைப்பு பெட்டி நிறுவச் சென்றால் தங்கள் வீட்டின் அருகில் மின்மாற்றி அமைக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவிக்கின்றனர். சீரான மின்சாரம் வழங்க பொது இடத்திலே மின்மாற்றி நிறுவ இடம் கிடைக்கவில்லையெனில், அந்தத் தெருவின் சுமார் 100 வீடுகளுக்கும் மற்றும் 30 கடைகளுக்கும் சீரான மின்சாரம் வழங்குவதில் சிரமம் ஏற்படும் என்பதையும் சமர்ப்பிக்கின்றேன்.

(V) மின்மாற்றி J-பிளாக் MMDA காலனி பகுதி மக்களுக்கு குறைந்த மின்னழுத்தம் எதுவுமின்றி சீரான மின் விநியோகம் வழங்குவதற்காகத்தான் சாலையின் ஓரத்தில் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டது. இதனால் மனுதாரரின் வீட்டிற்கு எவ்வித இடையூறும் இல்லை. மின்மாற்றியிலிருந்து J-பிளாக் எம்.எம்.டி.ஏ காலனி மக்களுக்கு தற்போது சீரான மின்விநியோகம் வழங்கப்பட்டு வரும் நிலையில் அதை அகற்ற இயலாது என்றும் அதை அருகில் வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டுமானால் பொதுமக்கள் ஆட்சேபனையின்றி அருகில் உரிய இடம் தேர்வு செய்த பின்னர் மனுதாரர் அதற்கான முழுச்செலவையும் ஏற்கும் சமயத்தில் தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சமர்ப்பிக்கின்றேன்.

**6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u> :**

**6.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **06.9.2018** அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடப்பட்டது.

**6.2** மேல்முறையீட்டாளர் திரு. M. மாணிக்கம், அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு.S. நெடுமாறன், உதவி செயற்பொறியாளர்/அரும்பாக்கம் மற்றும் திருமதி. C. கல்யாணி, உதவி பொறியாளர்/MMDA காலனி ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u> :**

7.1 மேல்முறையீட்டாளர் திரு. M. மாணிக்கம் அவர்கள் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப்பட்ட இடத்தில் வீடுகட்டி உள்ளதாகவும் அவரது வீட்டின் சுவர் அருகில் அனுமதி பெறாமல் 100 kVA மின் மாற்றி அமைத்துவிட்டாதாகவும் தெரிவித்தார். மேலும் மின்மாற்றி அமைப்பதற்கு கம்பங்கள் ஊன்றம்பொழுதே தாம் ஆட்சேபனை தெரிவித்து விட்டதாகவும். ஆனால் தாஙகள் ஊரில் இல்லாத பொழுது மின்மாற்றியமைத்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.3 தற்பொழுது எதிர்மனுதாரர்கள் மின்மாற்றி அமைக்கும்பொழுது தாம் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்பது உண்மையல்ல என்றும் தாம் ஆரம்பத்திலிருந்து உதவி பொறியாளர் முதல் அனைத்து மேலதிகாரிகளுக்கும் மனு அளித்ததோடல்லாமல் முதலமைச்சர் வரை மனுசெய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

7.4 தனக்கு நிலையான வருமானம் ஏதுமில்லையென்றும் ஆதலால் மின்மாற்றி மாற்றியமைக்கும் செலவை ஏற்றுக் கொள் என்றால் தான் எஙகு செல்வது என்றும், இந்த மின் மாற்றியினால் சுவரில் சுண்ணாம்பு வர்ணம் பூசமுடியவில்லையென்றும், சாரம் போட்டு சுவர் பழுது பார்க்க முடியாமலும் தவித்துக் கொண்டு இருப்பதாக தெரிவித்தார்.

7.5 மேலும் மின் மாற்றியானது அவரது வீட்டிற்கு போதிய இடைவெளியில்லாமல் அமைக்கப்பட்டுள்ளதாகவும், வீட்டின் சுவற்றிலிருந்து ஒரு அடி கூட இல்லையென்றும் தெரிவித்து மின்மாற்றியை வேறு இடத்திலோ அல்லது 30 அடி தூரத்தில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்திலோ அரசு செலவில் மாற்றித்தருமாறு தெரிவித்துக்கொண்டார்.

8.	<u>எதிர்மனுதாரர் கேட்பரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1	எதிர்மனுதாரர் சார்பில் கலந்துகொண்ட உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் தங்களது பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினர்.

8.2	J-பிளாக் எம்.எம்.டி.ஏ காலனியில் நிலவிய குறைந்த மின்னழுத்தத்தை நிவர்த்தி செய்து சீரான மின்விநியோகம் வழங்குவதற்காக J-பிளாக் சாலையின் ஓரத்தில் 100 கே.வி.ஏ மின்மாற்றி RAPDRP திட்டத்தில் கடந்த 2016ம் வருடம் அமைக்கப்பட்டதாக தெரிவித்தார்கள்.

8.3	மேலும் மேற்கண்ட மின்மாற்றி சாலையின் ஓரத்தில் போதிய இடைவெளியுடன் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து J-பிளாக் பொது மக்களுக்கு சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வரும் நிலையில் அதனை அரசாங்க செலவில் வேறு இடத்திற்கு மாற்றி தரும்படி கோரியிருப்பது விதிமுறைகளின்படி செய்ய இயலாதென்றும், தமிழ்நாடு மின் வழங்கல் விதி எண்.5(6)ன் படி மின் உபகரணங்களை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமானால் அதற்கான முழுச்செலவினையும் மின் நுகர்வோரே ஏற்க வேண்டும் என்று தெரிவித்தார்.

8.4	கேட்புரையின்போது மின்மாற்றிக்கும் மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கும் IE விதிமுறைகளின்படி Horizontal Clearance உள்ளதா என்று கேட்கப்பட்டபொழுது மின்மாற்றியின் கம்பத்திற்கும் மேல்முறையீட்டாளரின் வீட்டின் சுவற்றிற்கும் போதுமான இடைவெளியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்தார். ஆனால் மேல்முறையீட்டாளரின் மாடியில் அமைந்துள்ள பகுதிக்கும் மின்மாற்றி கட்டமைப்பின் Live Part–ற்கும் போதிய இடைவெளியில்லை என்று தெரிவித்தார். மேலும் மேல்முறையீட்டாளர் மேற்கு மற்றும் வடக்கு பக்கம் கூடுதலாக 1/2 அடி அவருக்கு சொந்தமில்லாத இடத்தில் கட்டியுள்ளதால் அவ்வாறு உள்ளது என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

8.5	எம்.எம்.டி.ஏ காலனி, அரும்பாக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் வீடுகள் மிகவும் நெருக்கமாகவும் சாலை மிகக் குறுகலாக உள்ள பகுதிகள் என்றும் மின் நுகர்வோர்கள் குறைந்த மின்னழுத்தம் உள்ளது, சீரான மின் விநியோகம் வழங்க வேண்டும்

என்று புகார் அளிப்பதாகவும் தெரிவித்தார். ஆனால் மின் தேவையை பூர்த்தி செய்ய மின்மாற்றி மின் இணைப்பு பெட்டி நிறுவச் சென்றால் தங்கள் வீட்டின் அருகில் மின்மாற்றி அமைக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவிக்கின்ற நிலையில் மின் உரிமதாரரின் பணியாளர்களாகிய தாங்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாவதாவும் இவ்வாறு அனைவருமே அவரவரின் வீட்டருகே மின்மாற்றியோ அல்லது மின்தடங்களோ அமைப்பதற்கு ஆட்சேபணை தெரிவித்தால் எதிர்காலத்தில் எந்தவொரு மேம்பாட்டு வேலையையும் தங்களால் செய்யமுடியாதென்றும் தெரிவித்தார்.

8.6 மேலும் தொலைத்தொடர்பு சட்டத்தில் உள்ள உரிமைகளின்படி தாங்கள் பொது இடத்தில் மின்மாற்றி மற்றும் மின்தடங்கள் அமைக்க யாருடைய அனுமதியும் பெறவேண்டியதில்லை என்றும் தெரிவித்தார்.

**9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

9.1 இருதரப்பு வாதஙகளையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களான தெரிகின்றன.

(i) மின்மாற்றி/மின்தடஙகள் ஆகியவற்றிற்கும் ஒரு கட்டிடத்திற்கும் இடைவெளி குறித்து விதிமுறைகளில் கூறப்படுவது யாது ?

(ii) மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கும் மின்மாற்றிக்கும் விதிமுறைகளின்படி போதிய இடைவெளியுள்ளதா ?

**10. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

10.1 மின்மாற்றி/மின்தடஙகள் ஆகியவற்றிற்கும் ஒரு கட்டிடத்திற்கும் உள்ள இடைவெளி குறித்து அறிய நான் The Indian Electricityy Rule 1956ன் விதி 79–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“79. Clearances from buildings of low and medium voltage lines and service lines-*
*(1) Where a low or medium voltage, overhead line passes above or adjacent to or terminates on any building, the following minimum clearances from any accessible point, on the basis of maximum sag, shall be observed: -*

*(a) For any flat roof, open balcony, verandah roof and lean-to-roof-*

*(i) When the line passes above the building a vertical clearance of 2.5 metres from the highest point, and (ii) When the line passes adjacent to the building a horizontal clearance of 1.2 metres from the nearest point, and*

*(b) For pitched roof-*

*(i) When the line passes above the building a vertical clearance of 2.5 metres immediately under the lines, and (ii) When the line passes adjacent to the building a horizontal clearance of 1.2 metres.*

*(2) Any conductor so situated as to have a clearance less than that specified in sub-rule (1) shall be adequately insulated and shall be attached at suitable intervals to a bare earthed bearer wire having a breaking strength of not less than 350 kg. (3) The horizontal clearance shall be measured when the line is at a maximum deflection from the vertical due to wind pressure.*

*Explanation- For the purpose of this rule, expression "building" shall be deemed to include any structure, whether permanent or temporary ".*

10.2 மேற்கண்ட விதி 79ஐ கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது, ஒரு கட்டிடத்திற்கு அதன் மேலேயோ அல்லது பக்கவாட்டிலோ செல்லும் தாழ்வழுத்த மின்சார கம்பிக்கும் கீழ்கண்ட இடைவெளி இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

| | |
|---|---|
| (i) மின்சார கம்பி கட்டிடத்தின் மேலே சென்றால் கட்டிடத்தின் உயர்ந்த இடத்திலிருந்து மின்கம்பிக்கு இடையிலுள்ள செங்குத்து உயரம் (vertical clearance) | –– 2.5 மீட்டர் (8 அடி) |
| (ii) கட்டிடத்திற்கும் அதன் அருகில் பக்கவாட்டில் செல்லும் தாழ்வழுத்த மின்சார கம்பிக்கும் இடையிலுள்ள இடைவெளி (Horizontal clerance) | –– 1.2 மீட்டர் (4 அடி) |

10.3 எனவே மேலே குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அமைக்கப்பட்ட மின்மாற்றி மற்றும் மின்தடங்கள் பாதுகாப்பாக விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ளதாக கருதலாம்.

**11. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>**

11.1 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் அவரின் கட்டிடத்திற்கும் மின்மாற்றிக்கும் இடையே ஒரு அடி கூட இல்லையென்று தெரிவித்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரரோ மின்மாற்றியின் கம்பத்திற்கும் மேல்முறையீட்டாளரின் வீட்டின் சுவற்றிற்கும் போதுமான இடைவெளியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் மேல்முறையீட்டாளரின் மாடியில் அமைந்துள்ள பகுதிக்கும் மின்மாற்றி கட்டமைப்பின் Live Part–ற்கும் போதிய இடைவெளியில்லை என்று தெரிவித்துள்ளார்.

11.2 மேலும் இவ்வழக்கிலுள்ள ஆவணங்களின்படி மேல்முறையீட்டாளர் மேற்படி குடியிருப்பில் கடந்த 25 வருடங்களாக வசித்து வருகின்ற நிலையில் கடந்த 2016–ம் ஆண்டுதான் எதிர்மனுதாரர்களால் மின்மாற்றி நிறுவப்பட்டுள்ளது. மேலும் ஆரம்பத்திலிருந்தே மேல்முறையீட்டாளர் மின்மாற்றி அமைப்பதற்கு ஆட்சேபணை தெரிவித்திருப்பது ஆவணங்களின் மூலம் தெரியவருகின்றது.

11.3 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கும் மின்மாற்றிக்கும் இடையே உள்ள சரியான அளவீட்டை எதிர்மனுதாரர் சமர்பிக்கவில்லை. ஆனால், இடநெருக்கடி காரணமாக மேல்முறையீட்டாளரின் மாடியில் அமைந்துள்ள பகுதிக்கும் மின்மாற்றி கட்டமைப்பின் Live Part –ற்கும் போதிய இடைவெளியுடன் அமைக்க முடியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

11.4 பத்தி 10–ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் கட்டிடத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் மின்மாற்றிக்கு I.E. RULEன் விதி 79ன் படி இடையிலுள்ள HORIZONTAL DISTANCE 1.2 மீட்டர் (4 அடி) ஆக இருக்க வேண்டும். மேல்முறையீட்டாளரின் மாடியில் அமைந்துள்ள பகுதிக்கும் மின்மாற்றி கட்டமைப்பின் Live Part–ற்கும் போதிய இடைவெளி தேவையான அளவுக்கு குறைவு என்பதால் மின்மாற்றிக்கும் வீட்டிற்கும் போதிய இடைவெளி இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.5 எதிர்மனுதாரர்கள் தொலைத்தொடர்பு சட்டத்தில் உள்ள உரிமைகளின்படி பொது இடத்தில் மின்மாற்றி மற்றும் மின்தடங்கள் அமைக்க யாருடைய அனுமதியும் பெறவேண்டியதில்லையென்றாலும் விதிமுறைகளின்படி மின்மாற்றி மற்றும் மின்பாதைகளை பாதுகாப்புடன் அமைக்க வேண்டிய கடமை உள்ளது என்பதையும் கவனத்தில்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

11.6 எனவே, மேலேயுள்ள பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கும் மின்மாற்றிக்கும் I.E. RULEன் விதி 79–ன் படி இடையிலுள்ள HORIZONTAL DISTANCE 1.2 மீட்டர் (4 அடி) –க்கு குறையாமல் பாதுகாப்பை உறுதிசெய்து உரிமதாரர் செலவில் மாற்றியமைத்துக்கொள்ளுமாறு தீர்வு செய்யப்படுகிறது.

12. <u>முடிவுரை</u>

12.1 வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கும் மின்மாற்றிக்கும் I.E. RULEன் விதி 79ன் படி இடையிலுள்ள HORIZONTAL DISTANCE 1.2 மீட்டர் (4 அடி) –க்கு குறையாமல் உரிமதாரர் செலவில் மாற்றியமைத்துக்கொள்ளுமாறு தீர்வு செய்யப்படுகிறது.

12.2 மேற்கண்ட தீர்வினை இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் நிறைவேற்றியமைக்கான அறிக்கையை (compliance report)–ஐ 60 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

12.3 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.30/2018 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைத் தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. M. மாணிக்கம்,
எண். 49, J– பிளாக்,
M.M.D.A. காலனி,
அரும்பாக்கம், சென்னை– 600 106.

2) செயற்பொறியாளர்/O&M/அண்ணா நகர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
1100 AH பிளாக், 5வது தெரு, ஏங்கநாதன் கார்டன்,
அண்ணா நகர், சென்னை–40.

3) உதவி செயற்பொறியாளர்/O&M/அரும்பாக்கம்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
P பிளாக், 253, MMDA காலனி,
அரும்பாக்கம், சென்னை–106.

4) உதவி பொறியாளர்/O&M/ M.M.D.A காலனி
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
P–பிளாக், 253, M.M.D.A காலனி,
அரும்பாக்கம், சென்னை–106.

5) மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. திருமங்கலம் துணை மின்நிலைய வளாகம்,
அண்ணா நகர், சென்னை–40.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.